<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 493/2021 நாள்: 02.12.2025 வா.சா.1 – ஜெகஜோதி**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

நான் பழைய SSLC படித்துள்ளேன். நான் தற்போது எவ்வித வேலையும் பார்க்கவில்லை. நான் உடுமலைபேட்டையில் சமூகம் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றங்களில் பல வழக்குகளை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் பண வரவு செலவு சம்பந்தப்பட்ட வழக்குகளை மேற்படி நீதிமன்றங்களில் தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்ற நடவடிக்கை முழுமையாக தெரியும் என்றால் சரிதான். நான் படித்து பார்க்காமல் எந்த ஆவணத்திலும் கையொப்பம் போடமாட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் ரூ.9 லட்சம் கடன் வாங்கியிருந்தார். அந்த 9 லட்சத்தையும் நான் பெற்று கொண்டேன், வட்டிக்காக தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கு வழக்குரையில் வட்டி மட்டும் தான் வேண்டும் என்று பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். பிரதிவாதி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ஓவர்சியராக வேலை பார்த்து வருகிறார். STC No.701/2019 வழக்கு உடுமலைபேட்டை, குற்றவியல் நீதிமன்றம் நடுவர் எண்.1 ல் குற்றவியல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் எனக்கும் பிரதிவாதிக்கும் மேற்படி வழக்கில் சமரசம் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி சமரசம் ஏற்பட்ட சமயத்தில் நான் வழக்கறிஞர் மூலமாக தான் மேற்படி வழக்கை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். மேற்படி சமரச நடவடிக்கை 12.11.2022 ல் மக்கள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ஆன சமரச தீர்ப்பில் நான் எனது கையொப்பத்தையிட்டு கைரேகையும் வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.9 ஆன ரசீதில் உள்ள முத்திரை வில்லைக்கு மேல் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான். வா.சா.ஆ.13 ஆவனத்தில் 1 லக்கமிட்டவர் என்ற முறையில் நான் பல கையொப்பங்கள் போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

**மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2025.12.02 16:24:44 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.